**தலைப்பு 110 - நீதி அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நீதி அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நீதி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 17 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 21 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) மூலதன செலவினங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஒரு மூலதன செலவின விடயத்திற்காக வெளிநாட்டு கொடை மூலமாக செய்து கொள்ளப்பட்டிருந்த ஒதுக்கீடுகளிலிருந்து திறைசேரியினால் ரூபா 2.768 மில்லியன் செலவின மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதனை திறைசெரி அச்சுக் குறிப்புக்கள் மூலமாகவோ அல்லது வருடத்திற்கான செலவு என்றோ கணக்கிலிடப்பட்டிருக்கவில்லை. ஆயினும், அச்செலவு விடயத்திற்கு திறைசேரியினால் குறிக்கப்பட்டிருந்த ரூபா 3,540 மிகைக் கட்டணத்தை நிதிக்கூற்றுக்களில் மூலதன செலவுகளிலிருந்து கழித்துக் காட்டப்பட்டிருந்தது. | GIZ திட்டத்தின் மூலம் நேரடியாக கொள்வனவு மேற்கொள்ளப்பட்டு அமைச்சுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள Laptop கணனியை இவ்வருடத்திற்கான நிலையான சொத்தாக கணக்கிலிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சகல செலவினங்களும் கணக்கிலிட வேண்டியதுடன் திணைக்கள புத்தகங்களை திறைசேரி குறிப்புக்களோடு பரீட்சிக்கப்பட்டு குறிப்புக்களினை சரி செய்து கொள்ளப்பட வேண்டும். |

**(ஆ) நிதியல்லா சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் வீட்டுத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களுக்கான செலவின விடயத்தில் வேறு செலவின தலைப்புக்கள் மூலமாக கணக்கிலிடப்பட்டிருந்த ரூபா | சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் இச்செலவின விடயங்களின் கீழ் கொள்வனவு மேற்கொள்ளப்படும் உபகரணங்கள் நிலையான | கொள்வனவு மேற்கொள்ளப்படும் சகல நிலையான சொத்துக்களும் மூலதனமாக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| 344,544 செலவுகள் மற்றும் 02 செலவின விடயங்களில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த மொத்தம் ரூபா 22,825,665 ஆன அலுவலக உபகரணங்களின் பெறுமதியை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களாக மூலதனமாக்கும் சாத்தியமில்லை. ஆகையால், அவ் உபகரணங்கள் வைக்கப்பட்டிருக்கும் இடங்களை சரியாக இனங்கண்டு கொண்டதன் பின்னர் நிதியல்லா சொத்துக்களின் ஆரம்ப மீதிகளாக கணக்கிலிடப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

### 1.6.2 ஆவணங்கள் முறையாக பேணப்படாமை

கீழ்க்காணும் ஆவணங்கள் முறையாகவும் மற்றும் இற்றைப்படுத்தப்பட்டும் பேணப்படாமையினை கணக்காய்வு தெரிவு பரீட்சிப்புக்களின் போது அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ஆவண வகை | சம்பந்தப் பட்ட பிரமாணம் | அவதானிப்பு | | நிதிப்பிரமாணத்தின் |
| (அ) | பிணை பதிவேடு | நிதிப் பிரமாணம் 891 | பேணப் பட்டிருக்க வில்லை. | பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்கண்டு பிணை வைப்பதற்கும், பிணை பதிவேட்டினை ஏற்பாடு செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளும் படி சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டனர். | பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர் களை இனங்கண்டு நிதிப் பிரமாணம் 891 படி பிணை பதிவேடு பேணப்பட வேண்டும். |
| (ஆ) | சேதங்க ளுக்கான பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 | இற்றைப் படுதத்ப் பட்டிருக்க வில்லை. | 2021 வருடம் நேர்ந்துள்ள 15 வாகன விபத்துக்களுக்கான தகவல்கள் உட்படுத்தப்பட்டு சேதங்கள் மற்றும் இழப்பீடுகளுக்கான அட்டவணையை இற்றைப் படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | பேணப்படும் சேதங்களுக்கான அட்டவணையில் சகல சேதங்கள் இழப்பீடுகள் உட்படுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | செலவின விபரங்கள் 41 ஆக ஏற்பாடு செய்து கொள்ளப்பட்ட தேறிய ஒதுக்கீடுகள் ரூபா 355,502,000 முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தன. | கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக உத்தியோகத்தர்களை கடமைக்கு அழைத்தலினை கட்டுப்படுத்தல், அதனால் பொறிகள் மற்றும் இயந்திர உபகரணங்களின் பாவனை குறைவடைதல், வெளிநாட்டு பயணங்களை கட்டுப்படுத்தல், எதிர்பார்த்த படி செலவுகள் ஏற்படாமை வெளியிடப்பட்ட சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய திட்டமிட்டபடி வேலைத் திட்டங்களை அமுல் நடத்துவதற்கு இயலாது போதல் ஆகிய காரணங்களினால் ஒதுக்கீடுகள் சேமிப்பாகி உள்ளன. | செயற்படு திட்டத்தின் அடிப்படையில் திட்டங்கள் வகுக்கப் படுவதனால் முன்னர் தீர்மானிக்கப்பட்ட செயற்பாடு திட்டத்திற்கு உட்பட்ட காரியங்கள் அதற்குரிய காலத்தினுள் நிறைவேற்றுவதற்கு செயற்பட வேண்டும். |
| (ஆ) | மேற்படி “அ” வில் குறிப்பிட்டுள்ள ஒதுக்கீடுகள் சேமிப்பாகி உள்ளமை தொடர்பாக மேற்கொண்டும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| i. | சர்வதேச அபிவிருத்திக்கான சர்வதேச முகவர் நிலையத்தின் சமூக சக வாழ்வு மற்றும் நல்லெண்ண செயற்பாடுகள் திட்டங்களுக்காக வெளிநாட்டு கொடைகள் மூலம் ரூபா 1,000,000 மற்றும் வெளிநாட்டு நாணயம் சார் கிரயத்தின் கீழ் ரூபா 12,000 ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்து கொண்டிருந்த போதிலும் அமைச்சினால் திட்டத்திற்கான முன்மொழிதல் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | சமூக சகவாழ்வு மற்றும் நல்லெண்ண செயற்பாடுகளுக்கான வெளிநாட்டுதவி திட்டத்தினை (SCORE) ஆரம்பிக்கப்படும் ஆரம்ப சந்தர்ப்பத்தில் Project Submission Form சமர்ப்பிக்கப்பட்டு அத்திட்டத்தின் பிரதான செயற்பாடுகளுக்கான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது. | செயற்படு திட்டத்தின் படி திட்டத்திற்கான முன்மொழிதல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| ii. | இந்திய அரசுடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தக் காலத்தை நீடிக்கப்பட்டமையினால் யாழ்ப்பாண மாவட்ட மழை நீர் நிரப்பும் டாங்கிகள் நிர்மாணிப்பு திட்டம் 2020 வருடம் நிறுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிலும் 3000 முறைமைகளை நிர்மாணிப்பதற்காக உள்நாட்டு நிதியம் ரூபா 25,000,000 வெளிநாட்டு நாணயம் சார் கிரயத்தின் கீழ் ஏற்பாடு செய்து கொள்ளப்பட்ட ரூபா 3,600,000 ஒதுக்கீடுகள் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தன. | திட்டத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் காலத்தினை தற்போது நீடிக்கப்பட்டுள்ளது. | புரிந்துணர்வு ஒப்பந்தக் காலத்தை நீடித்துக் கொண்டதன் பின்னர் ஒதுக்கீடுகள் ஒதுக்கி கொள்வதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| iii. | மாவட்ட மட்டத்தில் 25 நல்லெண்ண குழுக்களை அமைப்பதற்கு ரூபா 40 மில்லியன் ஒதுக்கீடு ஒதுக்கிக் கொண்ட போதிலும் வருடத்தினுள் குழுக்கள் அமைப்பது மேற்கொள்ளப்படா மையினால் ஒதுக்கீடுகள் முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | ரூபா 38.94 அரச செலவினம் ஆராய்வு அமைச்சரவை பத்திரத்தின் பிரகாரம் மூடி வைக்கப்பட்டுள்ளதுடன், கொவிட் 19 தொற்று நிலைமை காரணமாக வெளியிடப்பட்டுள்ள சுகாதார வழிகாட்டல்களின் படி மக்களை ஒன்று கூட்டுவதனை குறைத்துக் கொள்ளும் படி செய்யப்பட்டுள்ள அறிவுறுத்தலின் காரணமாய் மீதியுள்ள ஒதுக்கீடுகளும் பாவனை மேற்கொள்வதற்கு முடியாது உள்ளது. | நிதிப் பிரமாணம் 50 இன் படி சிக்கனத் தன்மை மற்றும் செயற்திறன் பற்றி முறையாக கவனம் செலுத்தப்பட்டு நிதி ஆண்டினுள் தனது நிறுவனத்திற்கு நிறைவேற்றக் கூடிய சக்திக்குட்பட்ட திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். |
| iv. | X-Press Pearl கப்பலினால் நேர்ந்துள்ள கடல்சார் அழிவினை பற்ற சட்ட செயற்பாடுகளினை வழங்கப்பட்டுள்ள சட்ட கம்பனியினைக்கு செலுத்துவதற்கு குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் 110-1-2-26-1409 கொண்ட செலவின விடயத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 9.65 ஒதுக்கீடு, அந்நிய செலாவணியை செலுத்தும் படி மக்கள் வங்கியிடம் விடுக்கப்பட்ட கோரிக்கை | திறைசேரி திணைக்களத்திடம் போதுமான அளவிலான அந்நிய செலாவணி இல்லாமையினால் மேற்படி கோரிக்கையினை நிராகரிக்கப்பட்டதனால் ஒதுக்கீடு சேமிப்பாகி உள்ளது. | சரியானதொரு திட்டத்திற்கமைய குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கீடு ஏற்பாடு சேய்து கொள்ளப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிராகரிக்கப்பட்டமையால் முழுமையாக சேமிப்பாகி இருந்தது. | | | |
| v. | முறையாள திட்டம் இல்லாமல் குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் ஒதுக்கீடு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ள மையினால் 03 செலவின விடயங்களின் ஒதுக்கீடுகள் நூற்றுக்கு 21 முதல் நூற்றுக்கு 59 வரையிலான சேமிப்பாக இருந்தது. | **செலவின விபரம்** | **சேமிப்பதற்கான காரணம்** | காரியத்தை நிறைவேற்று வதற்கான சாத்தியப்பாடு ஊடாக குறைநிரப்பு ஒதுக்கீடு பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| | | 110-1-2-22-2104 | சேவையில ஈடுபட்டிருந்த அதிகபடியான ஊழியர்களுக்கு கொவிட் தொற்று தொற்றியமை யால் எதிர்பார்த்தவாறு ஒப்பந்த நிர்மாணப் பணிகளை மேற்கொள் வதற்கு இயலாது போயிற்று. | |
| | | 110-1-2-0-1404<br>110-1-2-23-2001 | அமைச்சின் சகல பிரிவுகளையும் களுதொட்ட கட்டிடத்திற்கு கொண்டு வருவதற்கு திட்டமிடப் பட்டிருந்த போதிலும் உயர்நீதிமன்ற தொகுதி கட்டிடத்தை நவீனமயப்படுத்து வது தொடர்பான ஒப்பந்தத்திலுள்ள வரி நிபந்தனை சிக்கலினை தீர்த்துக் கொள்வதற்கு நிதி அமைச்சு போதியகாலம் தாழ்த்திய மையால் சில பிரிவுகளை உயர் நீதிமன்ற கட்டிடத்திற் குள்ளெயே நடாத்தப்பட்ட மையினால் ஒதுக்கீடு சேமிப்பாகி உள்ளது. | |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) பொறுப்புக்களுக்கான கூற்று (i) (குறிப்பு (iv) காட்டப்பட்டிருந்த மொத்தம் ரூபா 1,498,440 ஆன பொறுப்புக்கள் திறைசேரியின் இணக்கப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களுக்கான அறிக்கையில் (SA92) உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | திறைசேரி இணக்கப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களுக்கான கூற்றில் உள்ளவை ஏனைய திணைக்கங்கள், மாவட்ட செயலகங்களிலிருந்து இவ்அமைச்சின் செலவின தலைப்புக்களில் கணக்கிலிடப்பட்ட இணக்கங்கள் மற்றும் பொறுப்புக்களாகும். | 2021 நவம்பர் 26 ஆந் திகதிய இலக்கம் 2021/03 கொண்ட அரச கணக்குகள் வழிகாட்டலின் 3.2 பந்தியின் படி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள எண்ணிக்கை இறுதி திறைசேரி கணக்குக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீதிகளுடன் இணங்குவதாக அத்தாட்சிப்படுத்தப் பட வேண்டும். |
| (ஆ) திறைசேரி இணக்கப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களுக்கான கூற்றில் (SA92) உட்பட்டிருக்கும் தொகை ரூபா 13,346,860 ஆன பொறுப்புக்கள் இணக்கப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களுக்கான கூற்றில் (குறிப்பு-III) மற்றும் பொறுப்புக்களுக்கான கூற்றில் (i) (குறிப்பு iv) உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | திறைசேரி இணக்கப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களுக்கான கூற்றில உள்ளவை, ஏனைய திணைக்களங்கள், மாவட்ட செயலகங்களினால் இவ் அமைச்சின் செலவினத் தலைப்பில் கணக்கிலிடப்பட்ட இணக்கப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களாகும். ஆகையினால் அதனை குறிப்பு III இல் உட்படுத்தப்படவில்லை. | 2021 நவம்பர் 26 ஆந் திகதிய இலக்கம் 2021/03 கொண்ட அரச கணக்குகள் வழிகாட்டலில் 3.2 பந்தியின் படி நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள எண்ணிக்கை இறுதி திறைசேரி கணக்குக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மீதிகளுடன் இணங்குவதாக அத்தாட்சிப்படுத்தப் பட வேண்டும். |
| (இ) இணக்கப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களுக்கான கூற்றில் (குறிப்பு-III) உட்படுத்தப்பட வேண்டிய தொகை ரூபா 741,570 ஆன செலவின விடயங்கள் 05, பொறுப்புக்கள், நிதிப் பிரமாணம் 94 (2) மற்றும் (3) பிரகாரம் ஏற்படுத்தப்பட்ட | திறைசேரி மற்றும் இணக்கப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களுக்கான கூற்றில் உள்ளமை, ஏனைய திணைக்களங்கள், மாவட்ட செயலகங்களிலிருந்து இவ் அமைச்சின் செலவின தலைப்பில் | தகவல்கள் சரியாக நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தப்பட வேண்டும். |

| | |
|---|---|
| பொறுப்புக்களுக்கான கூற்றில் (குறிப்பு iv) உட்படுத்தப்பட்டிருந்தது. | கணக்கிலிடப்பட்ட இணக்கப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களாகும். ஆகையால் அதனை குறிப்பு III இல் உட்படுத்தப்படவில்லை. |

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| | அவதானிப்புக்கள் | | | |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமைகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
| | **ரூபா** | | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | | |
| i. நிதிப்பிரமாணம் 94(I) | 58,350 | வருடாந்த மதிப்பீடுகளில் பண ஒதுக்கீடுகள் இருந்தால் ஒழிய வேலை அல்லது சேவை அல்லது வழங்கலுக்கான எதுவி செலவுக்கும் அல்லது இணக்கப்பாட்டுக்கு இணங்கப்படாது இருக்க வேண்டியுள்ள போதிலும் 02 செலவின விடயங்களுக்காக வருடத்திற்கான ஒதுக்கீடு மீதியினை விஞ்சப்பட்டு பொறுப்புக்களுக்கு இணங்கப்பட்டிருந்தது. | இதனகத்திற்குப் பிறகு பொறுப்புக்கள் ஏற்படுத்திக் கொள்ளும் படி தேவையான நடவடிக்கை மேற்கொள்ளும் படி சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் படி செயற்பட வேண்டும். |
| ii. நிதிப்பிரமாணம் 109(1) மற்றும் (2) | 47,650 | 2012 முதல் 2021 நவம்பர் வரையிலான 08 சந்தர்ப்பங்களில் நேர்ந்துள்ள இழப்புக்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக | 03 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டு | நிதிப்பிரமாணம் படி செயற்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | வருவதுடன் ஏனைய இழப்பீடுகள் தொடர்பாக இழப்பீடுகளை தள்ளுபடி செய்வதற்கும் மற்றும் இழப்பீடுகளை அறவிடப்படுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப் படுகின்றது. | |
| iii. | நிதிப்பிரமாணம் 365(3) | 833,699 | கட்டுநிதிக்குரிய பணம் அதற்குரிய நிதியாண்டல்லாத நிதியாண்டில் கொடுப்பனவுகள் தீர்ப்பதற்காக பயன்படுத்தப்படாதென காட்டப்பட்டிருந்த போதிலும் 2022 வருடத்திற்கான வரி குத்தகைப் பணம் ரூபா 833,699 2021 வருடத்திற்கான ஒதுக்கீடுகளிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | இதனகத்திற்கு பின்னர் அது போன்று கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படாதென உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணம் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| iv. | நிதிப்பிரமாணம் 371(2) (அ) | 46,400 | உரிய காரியத்திற்கான உபகட்டு நிதியை பெற்றுக் கொள்ளப்படும் காரியம் செய்து முடிக்கப்பட்டவுடன் தீர்க்கப்பட வேண்டியுள்ள போதிலும் முற்பணத்தினை பெற்றுக் கொள்ளப்பட்ட காரியம் இரத்துச் செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில் மொதத முற்பணத்தினையும் மீளச் செலுத்தப்பட வேண்டியிருந்த 06 சந்தர்ப்பங்களில் வேலை செய்யும் 10 நாள் முதல் 07 மாதம் வரையிலா காலம் வரை பணத்தினை கையிருப்பில் | உரிய காரியம் முடிக்கப்பட்டதும் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டுநிதியினை சகல பதவிசார் உத்தியோகத்தர்களும் அறிவுறுத்தப் பட்டுள்ளனர். | நிதிப் பிரமாணம் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | வைத்துக் கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (v) | நிதிப்பிரமாணம் 835(3) | - | அமைச்சு வாடகை அடிப்படையின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த எவ்வித கட்டிடத்தினையும் உடன்படிக்கை பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் அனுப்பப்பட்டிருக்க வில்லை. | சம்பந்தப்பட்ட உடன்படிக்கையின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதிப் பிரமாணம் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | 2016 ஆகஸ்ட் 03 திகதிய இலக்கம் 250/2016(1) கொண்ட அரச நிதி அமைச்சின் அரச கணக்குகள் சுற்றுநிருபம் | 15,021, 830 | பெற்றுக் கொடுக்கப்படும் ஒவ்வொரு முற்பணத்திற்காகவும் பிரதான பேரேட்டு கணக்கின் கீழ் வோறன கணக்கு இலக்கமொன்று அரச கணக்குகள் திணைக்களத்திடமிருந் து பெற்றுக் கொள்ளப்படாமையின ால் மீளாய்வாண்டு இறுதியின் போது மேற்கொண்டும் அறவிடப்பட வேண்டிய ரூபா 1,722,500 வாடகை முற்பண மீதி மற்றும் மீளாய்வாண்டில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 13,299,330 வேலை முற்பணம் வேலை முற்பணக் கணக்கில் வெளிக்காட்டப்பட்டிருக் க வில்லை. | இக்கொடுப்பனவுகள் 2509-8 மற்றும் 2001 செலவின விடயங்களிலிருந்து மேற்கொள்ளப் பட்டிருந்தமையால் முற்பண கணக்கு இலக்கங்கள் பெற்றுக் கொள்வதற்கு முடியாது இருந்தது. ஆகையால், அறவிடப்பட வேண்டிய அம்முற்பண மீதிகள் கூலி மற்றும் வேலை முற்பண கணக்கில் காட்டப்படவில்லை. | சுற்றுநிருபத்தின் படி செயற்பட வேண்டும். |

## 2.4 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 மற்றும் 2019 வருடங்களில் ஒப்பந்தங்களுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளும் போது தவணைப் பணமாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த மொத்தம் ரூபா 518,178, 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | இத்தடுப்பு வைப்பு பணத்தினை விடுவிப்பதற்காக தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் பரிந்துரைகள் கோரப்பட்டுள்ளன. | ஒப்பந்த உடன்படிக்கையின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) 2016 நவம்பர் மாதம் நடைபெற்ற இணக்கத் தினத்தையொட்டி மேற்கொள்ளப்பட்ட செலவுகளை தீர்ப்பதன் பொருட்டு UNDP திட்டத்திலிருந்து 2017 மார்ச் 22 திகதி கிடைக்கப் பெற்ற ரூபா 1,316,041 தொகையினை அதற்கான குறிக்கோளினைக்கு செலவிடப்படாது 2022 ஏப்ரல் 29 ஆந் திகதி வரையம் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | இவ்வாண்டில் இணக்கப்பாட்டாளர்களை பயிற்சிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதற்கு பயன்படுத்த தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கிடைக்கப் பெற்ற பணத்தை உரிய காரியத்திற்கு இடப்பட வேண்டியதுடன் அவ்வாறு இல்லாதுவிடின் நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 கொண்ட அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த செயற்பாடு திட்டத்தை தயாரிக்குப் பொருட்டான வழிகாட்டல் இலக்கம் 12 இல் வலியுறுத்தப்பட்டிருந்த போதிலும் 2021 ஆண்டிற்காக | 2015.09.22 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானப் படி தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட இலக்கம் MNPEA/APG/15 கொண்ட வழிகாட்டல் ஆலோசனைப் | சுற்றுநிருபப்படி செயற்படு திட்டத்தை தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தயாரிக்கப்பட்டிருந்த செயற்படு திட்டத்தில் வரவு செலவினை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமையின் படி தயாரிக்கப்பட்ட செயல்முறை திட்டத்தில் பொறுப்புக்கான தளம், செயல்முறை மற்றும் பலன், வருடாந்த செயல்முறைக்கான கட்டுநிதி தேவைப்பாட்டுக்கான திட்டம், திட்டமிடப்பட்டுள்ள பிரதான அபிவிருத்தி திட்டங்களுக்கான வருடாந்த பெறுகை திட்டத்தினை உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | படி 2021 வவருடத்தின் செயற்படு திட்டத்தினை தயாரிக்கப்பட்டுள்ளது. | |

## 3.2 செயலாற்றுகை காட்டிகளை அடைவதற்கான முன்னேற்றம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சமர்ப்பிக்கப்பட்டிருந்த வரைபு செயலாற்றுகை அறிக்கையின் படி அமைச்சினால் செயற்படு திட்டத்தினை அடிப்படையாகக் கொள்ளப்பட்டு 07 செயலாற்றுகை காட்டிகளை இனங்காணப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 04 காட்டிகளுக்கான 2021 வருடத்தில் இலக்கினை அடைந்து கொள்ளப்படவில்லை. | COVID 19 தொற்று நிலைமை காரணமாக அலுவலக வேலைகளை தொடர்ந்து மேற்கொள்வதற்கு இடர்பாடு ஏற்படல், சட்ட திருத்தங்கள் மேற்கொள்ளும் போது அது தொடர்பாக அக்கறை செலுத்தும் தரப்பினர்களிடமிருந்து பல்வேறுபட்ட அவதானிப்புக்கள் முன்வைக்கப்படுவதன் மூலம் சட்டவரைபினை மீண்டும் கலந்துரையாடப்பட்டு திருத்தம் மேற்கொள்ளல், அமைச்சரவை அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்கு சில பல சந்தர்ப்பங்களில் காலம் கடந்து போதல் மற்றும் பராளுமன்ற கூட்டத்தொடரினை இடைநிறுத்தல், நீதிமன்றத்தில் உள்ள வழக்குகள் முடிவுறும் வரை குற்றச் செயல்களுக்கு பலியாக்கப்பட்டோரினதும் மற்றும் சாட்சியங்களை பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபைக்கு | இயல்பான மற்றும் நடைமுறையிலான செயலாற்றுகை இலக்குகளினை அடைந்து கொள்வதற்கு செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இலக்குகளினை இனங்கண்டு கொள்ள முடியாமை, கொவிட் 19 தொற்று காரணமாக மக்கள் ஒன்று கூடலினை கட்டுப்படுத்தப்பட்டிருந்த மையினால் நிறுவனத்திற்குள்ளும் மற்றும் வலயங்களிலும் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துவதற்கு முடியாது போனமையால் இவ்வாறு நடந்தது. | |

**3.3 திட்டங்கள் முடிக்கப்படாது விட்டுவிடுதல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| இரண்டு மாடிகளைக் கொண்ட புத்தளத்தில் சட்ட உதவி மற்றும் சனசீர்திருத்த கட்டிடத்தை நிர்மாணிக்கும் பணியினை 2010 செப்தெம்பர் 15 ஆந் திகதி வெளித்தரப்பினருக்கு ரூபா 5,583,770 ஒப்பந்த பெறுமதிக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2011 மார்ச் 27 ஆந் திகதி வேலைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டியிருந்தது. ஒப்பந்தத்திற்காக 2014 வருடத்திலும் வருடாந்த மதிப்பீட்டிலிருந்து ரூபா 05 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் இவ் ஒதுக்கீட்டினை பாவனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. திட்டத்தின் வேலைகள் முடிக்கப்படாது தரைத் தளத்தை மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்த கட்டிடத்தில் சட்ட அலுவலகத்தை நடாத்தப்பட்டு வருவதுடன் இதன் காரணமாக நல்லுபதேசம் வழங்கல் மற்றும் காரியாலய அலுவல்கள் மேற்கொள்வதற்காக தனியார் அலுவலகமொன்றினை தாபிக்கும் தேவைப்பாடு 2022 மே மாதம் வரையில் நிறைவேறாதிருந்தது. மேலும் ஒவ்ஒப்பந்தக்காரருக்கு 2010 ஒக்தோபர் 21 ஆந் திகதியிடப்பட்டு செலுத்தப்பட்டிருந்த வேலை ஆரம்பிப்பதற்கான முற்பணத்தில் ரூபா 254,691 மற்றும் செயலாற்றுகை பிணை | மேற்கொண்டும் அறவிடப்பட வேண்டிய பணத்தினை அறவிடுவதற்காக ஒப்பந்த நிறுவனத்திடம் 2022.04.26 திகதிய கடிதம் மற்றும் 2022.05.26 திகதிய ஞாபகமூட்டல் கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அக்கடிதங்களுக்கு ஒப்பந்த நிறுவனம் நடவடிக்கை மேற்கொள்ளாவிட்டால் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் அறிவிக்கப்பட்டு அங்கிருந்து கிடைக்கப் பெறும் ஆலோசனைப் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிர்மாணிப்பின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளப்பட வேண்டியதுடன் அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| வைப்பிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 339,535 மொத்தம் ரூபா 594,286 ஆனது 2021 திசெம்பர் 21 இல் உள்ளவாறு அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |

**3.4 பிரதான அலுவல்களுக்கு முரண்பட்ட செயற்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் குறிக்கோள்கள் மற்றும் அலுவல்களுடன் தொடர்பற்ற திட்டமான கொழும்பு மற்றும் தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தை தொடர்புபடுத்திக் கொண்டு யாழ்ப்பாணத்தில் புது சிறப்பு பொருளாதார மத்திய நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக மீளாய்வாண்டில் 110-1-05-22-2509 செலவின விடயத்திற்கு வருடாந்தம் மதிப்பீட்டிலிருந்து ரூபா 20,000,000 ஒதுக்கீடு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதனை பிரயோசனப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | இந்நிர்மாணப் பணித் திட்டத்தினை விவசாய அமைச்சிடம் 2020 திசெம்பர் மாதம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆனால் 2021 வருடத்திற்கான வரவு செலவு மதிப்பீடுகள் தயாரிப்பதை 2020 செப்தெம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்டுள்ள மையால் அத்திட்டத்திற்காகவும் 2021 வருடத்திற்கான ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. | அமைச்சின் குறிக்கோள்கள் மற்றும் அலுவல்கள் தொடர்பாக மதிப்பீடுகள் மூலம் ஒதுக்கீடுகள் ஒதுக்கப்பட்டுக் கொள்ளப்பட வேண்டும். |

**3.5 எதிர்பார்க்கப்பட்ட பிரதிபயன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சரவை செயலாளரின் இலக்கம் 20/1252/330/001-1 மற்றும் 2020 செப்தெம்பர் 10 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் கடிதத்தில் கௌரவ நீதி அமைச்சரால் புதிய அரசியல் சாசனமொன்றினை வரைவு செய்வதனை பூரணப்படுத்துவதற்கு நிச்சயிக்கப்பட்ட காலவரம்பினை இனங்காணுவது பொருத்தமென முன்மொழியப்பட்டு அச்செலவுகளுக்காக ரூபா 100 மில்லியன் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. கணக்காய்வு திகதியான | நிபுணத்துவ குழுவின் 05 அங்கத்தவர்கள் எதுவித கொடுப்பனவும் பெற்றுக் கொள்ளாது சேவை செய்தல், முதலில் இனங்காணப்பட்டு ஒதுக்கப்பட்ட அலுவலக வசதிகள் Covid 19 தொற்று நிலைமை காரணமாக 2020.12.31 திகதிக்கு அப்பால் பாவனை மேற்கொள்ளப்படாமை மெய்நிகர் வழியாக கூட்டங்கள் நடாத்தல் காரணமாக ஏராளமான செலவினங்கள் சேமிக்கப்பட்டமை, இச்சிக்கலான செயற்தொடருக்கான | அமைச்சரவை தீர்மானப்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் கவனமாகவும் சிக்கனமாகவும் சம்பந்தப்பட்ட அலுவலகங் களுக்காக செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒதுக்கீடுகள் ஒதுக்கிக் கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 2021 திசெம்பர் 27 வரையிலும் கால வரம்பினை ஏற்படுத்துவதனையோ அல்லது மதிப்பீட்டினை தயாரிப்பதையோ மேற்கொள்ளப்பட்டிருக்காத துடன் 2020, 2021 மற்றும் 2022 வருடாந்த மதிப்பீடுகளிலிருந்து முறையே ரூபா 50,100 மில்லியன் மற்றும் 08 உம் ஆக மொத்தம் ரூபா 158 மில்லியன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த ஏற்பாடுகளில் 2020 மற்றும் 2021 ஆம் வருடங்களில் முறையே ரூபா 41,093,108 மற்றும் ரூபா 88,063,094 அதாவது மற்றும் நூற்றுக்கு 82 மற்றும் நூற்றுக்கு 88 சேமிப்பாகியுள்ளது. | செலவுகளை நிச்சயித்து எதிர்வு கூறுவது கஷ்டமாக இருப்பது போன்ற காரணங்களினால் ஒதுக்கீடுகள் சேமிப்பாகியுள்ளது. | |
| (ஆ) | குழுவின் ஆரம்பக் கூட்ட 2020 ஒக்தோபர் 09 ஆந் திகதியும், அத்திகதியிலிருந்து 2021 திசெம்பர் 12 ஆந் திகதி வரையும் குழுக் கூட்டம் 38 முறைகளும், வெளித்தரப்பினருடன் கூட்டங்கள் 09 முறைகளும் நடாத்தப்பட்டு மொத்தம் ரூபா 20,843,798 செலவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. நிதி அமைச்சு செயலாளரின் கையொப்பம், திகதி மற்றும் கடித இலக்கமில்லாமல் சமர்ப்பிக்கப்பட்டிருந்த குழு நியமங்களின் (TRO) குழு நியமிக்கப்பட்ட திகதி முதல் 06 மாதங்களுக்குள் அரசியல் சாசனத்தை வரைபு செய்யப்பட்டு முன்வைக்கும் செயற்தொடரினை பூரணப்படுத்தப்பட வேண்டுமென மற்றும் தேவைப்பாட்டின் படி கோரிக்கைவிடப்படின் மேற்கொண்டும் காலத்தினை நீடிக்க முடியுமென காட்டப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 இல் | புது அரசியல், சட்டமொன்றை நிர்மாணிப்பது தொடர்பாக பரிந்துரைகள் தயாரிப்பது மிகவும் சிக்கலான செயற்தொடராக இருப்பதுடன் பலதரப்பட்ட தரப்பினர்களிடமிருந்து கருத்துக்கள் மற்றும் பிரேரணைகள் பெற்றுக் கொள்ளல் மற்றும் ஆராய்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். அங்கத்தினர்கள் முழுநேர சேவையினை வழங்கும் உத்தியோகத்தர்கள் அல்லாததுடன் 05 அங்கத்தினர் எதுவித கொடுப்பனவும் பெற்றுக் கொள்ளாது சேவையாற்றி உள்ளனர். அதேபோன்று Covid 19 தொற்று நிலைமை மற்றும் அதற்கு நேரொத்ததாக மேற்கொள்ளப்பட்ட போக்குவரத்து கட்டுப்பாடு மத்தியிலும் குழு தனக்குரிய பொறுப்பினை நிறைவேற்றியுள்ளது. இவ் விடயங்கள் சீர்தூக்கி | சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் கலந்துரையாடப் பட்டு நிச்சயிக்கப்பட்ட கால வரம்பினுள் அலுவலினை செய்து முடிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளவாறாக குழுவினை நியமிக்கப்பட்டு 15 மாதங்கள் கழிந்துள்ள போதிலும் அதன் பொறுப்பினை முடிக்கப்பட்டிருக்கவில்லை. | பார்க்கப்பட்டு மாண்புமிகு சனாதிபதி அவர்கள் இக்குழுவின் காலஎல்லையினை நீடித்துள்ளனர். | |
| (இ) | மேலும் மேற்படி (ஆ) வில் கொடுப்பனவுகளுக்கு உட்பட்ட உபயோகப்படுத்தப்படாத 03 அலுவலக அறைகளுக்காக வழங்கப்பட்ட ரூபா 816,480 வாடகைப் பணமும் உபயோகப்படுத்தப்படாத ரூபா 435,348 பெறுமதிவாய்ந்த அலுவலக உபகரணங்களும் வீணடிக்கப்பட்ட செலவுகளாக இருந்தன. | நாட்டினுள் பரவிய Covid 19 தொற்று நிலைமை மற்றும் போக்குவரத்து கட்டுப்பாடு காரணமாக குழுக் கூட்டங்கள் மெய்நிகர் தொழில்நுட்பம் ஊடாக மேற்கொள்ளப்பட்டமை யினால் ஒதுக்கப்பட்ட அறைகள் இலக்கம் 29, 30 மற்றும் 33 திரும்ப ஒப்படைக்கப்பட்டன. புதுப் பணிக்குழாமுக்காக மற்றும் அமைச்சின் சில பிரிவுகளில் நிலவிய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக கொள்வனவு மேற்கொள்ளப்பட்ட அவ் அலுவலக உபகரணங்கள் உபயோகப்படுத்தப்பட்டன. | தேவைப்பாட்டினை சரியாக இனங்கண்டு பொருளாதார கொடுக்கல் வாங்கல்களுக்கு மாத்திரம் பொது மக்கள் பணத்தை இடப்பட வேண்டும். |
| (ஈ) | புது அரசியல் சாசனம் ஒன்றினை வரைவிடப்படுவதற்காக தாபிக்கப்பட்ட குழுவில் நிபுணர்களுக்கு ஒரு கூட்டத் தொடரில் பங்குபற்றுவதற்காக தலா ரூபா 25,000 வீதம் ரூபா 3,100,000 ஒரு கூட்டத் தொடருக்கு போக்குவரத்து செலவாக தலா 5,000 வீதம் ரூபா 120,000 மற்றும் குழுச் செயலாளரின் மாதாந்த கொடுப்பனவு தலா ரூபா 200,000 வீதம் ரூபா 1,200,000 இணைப்பாளர் மாதாந்த கொடுப்பனவு ரூபா 100,000 வீதம் ரூபா 600,000 முழுநேர ஆராய்ச்சி உதவியாளர் மாதாந்த கொடுப்பனவு ரூபா 80,000 வீதம் ரூபா 2,600,000 பகுதிநேர ஆராய்ச்சி உதவியாளர் கொடுப்பனவு ரூபா 40,000 வீதம் 2,560,000 என மொத்தம் ரூபா 10,180,000 ஆனது 2021 | புது அரசியல் சாசனம் ஒன்றினை வரைவிடப்படுவதற்காக கொடுப்பனவு மேற்கொள்வற்கான விளக்க அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்வதற்காக 2022.04.29 திகதிய இலக்கம் 2022/Cab Memo/J/R/38 கொண்ட அமைச்சரவை பத்திரத்தினை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | திறைசேரி அனுமதியின்றி மேற்கொள்ளப் பட்டிருந்த கொடுப்பனவுகளை அதற்கு பொறுப்பான தரப்பினர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| திசெம்பர் 31 வரையும் வழங்ப்பட்டிருந்த போதிலும் அதற்கான விலை விகிதத்திற்கான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |

### 3.6 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| அரச பெறுகைகள் வழிகாட்டலின் பிரகாரம் செயற்படாது வெளித்தரப்பினர்களிடமிருந்து 03 கட்டிடங்கள் மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்திலிருந்து 06 அறைகள் பெற்றுக் கொண்டு முறையே ரூபா 88,436,100 மற்றும் ரூபா 4,768,200 செலுத்தப்பட்டிருந்தன. | இலக்கம் 130, ஹால்ட்ஸ்ரோப் வீதி, கொழும்பு 12, விலாசத்தில் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் இலக்கம் 150, மிஹிந்து மாவத்தை கொழும்பு 12 அமைந்துள்ள 02 கட்டிடங்கள் வாடகை அடிப்பயில் பெற்றுக் கொள்ளும் போது பெறுகை வழிகாட்டல்கள் பிரகாரம் செயற்பட்டுள்ளது. இலக்கம் 19 சங்கராஜ மாவத்தை கொழும்பு 10, விலாசத்திலுள்ள கட்டிடத்திற்கு இலக்கம் அமப/21/0842/330/004-1 கொண்ட அமைச்சரவை தீர்மானம் மூலம் அனுமதியினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பெறுகைக் குழுவின் அனுமதியினை பெற்றுக் கொள்ளப்பட்டு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் 06 அறைகள் வாடகைக்குப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. | 2006 சனவரி 25 ஆந் திகதிய தேசிய பெறுகைகள் வழிகாட்டி சுற்றுநிருபத்தின் படி செயற்பட வேண்டும். |

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நீதி அமைச்சினால் 2007-2010 வருடங்களில் ரூபா 374,119,204 செலவிடப்பட்டு | திட்டப்படம் கிடைத்ததன் பின்னர் கையேற்றுக் கொள்வதற்கான | சட்டபூர்வமாக ஆவணங்கள் பெற்றுக் |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணிக்கப்பட்டிருந்த சட்ட வரைபுத் திணைக்களம் அமைந்துள்ள கட்டிடத்திற்கு சொந்தமான காணியின் திட்டப்படத்தின் பிரதியினை பெற்றுக் கொள்ளப்பட்டு காணியினை கையேற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் முடித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | நீதி அமைச்சுக்குச் சொந்தமான நுவரெலியா உல்லாச விடுதி அமைந்துள்ள ஹெக்டயர் 0.2023 ஆன காணி, இரத்மலானை உல்லாச விடுதி அமைந்துள்ள ரூட் 01 பர்ச்சஸ் 10 ஆன காணி மற்றும் பத்தரமுல்லை சிறுவர்களுக்கான நீதிமன்றம் அமைந்துள்ள ஹெக்டயர் 0.1760 ஆன காணி ஆகியவற்றை கையேற்பதற்கான அலுவல்கள் முடிக்கப்பட்டிருக்காததுடன் மதிப்பீட்டு பெறுமதியும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | காணியை கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அவ்வலுவல்கள் முடிக்கப்பட்டதன் பின்னர் பெறுமதி மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டபூர்வ ஆவணங்களை பெற்றுக் கொள்ளவும் மற்றும் பெறுமதி மதிப்பீட்டினை மேற்கொள்ளவும் செயற்பட வேண்டும். |
| (இ) | கொழும்பு புதிய நீதிமன்ற கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக பீ.சீ.சீ லங்கா லிமிட்டட் நிறுவனத்திற்குச் சொந்தமான ஹெக்டயர் 2.4281 காணியின் உரிமையை 2019 வருடம் கையேற்கப்பட்டு நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் காணியின் மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பிரதேச செயலாளரினால் காணியினை கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அமைச்சிடம் சட்டபூர்வமாக காணியை கையளிக்கப்பட்டதன் பின்னர் மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காணியின் உரிமையை தாமதமின்றி பெற்றுக் கொள்ளப்பட்டு மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | அமைச்சின் உபயோகத்திற்காக வேறு நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த 07 வாகனங்களின் உரிமையினை 2022 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் கையேற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சட்டமா அதிபர் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த 04 வாகனங்கள் நீதி அமைச்சு செயலாளரின் பெயரில் கையேற்றுக் கொள்வதற்கு சட்டமா அதிபரின் ஆட்சேபனை இல்லையெனும் கடிதத்தை பெற்றுக் கொள்வதற்கும், ஏனைய 03 வாகனங்களின் பதிவுச் சான்றுகளின் அசல் பிரதிகள் அப்போதைக்கான சிறைச்சாலை புனர்வாழ்வு மற்றும் சிறைக் கைதிகள் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சிடமிருந்து வரவழைத்து கொள்ளவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | அமைச்சு உரிமையினை கையேற்றுக் கொள்ள வேண்டும். |
| (உ) | பதில் அமைச்சரின் கடமைக் காரியங்களுக்காக ஒப்படைக்கப்பட்டிருந்த சுமார் ரூபா 5,000,000 சந்தைப் பெறுமதியுள்ள கெப் வாகனம் 2017 மார்ச் 08 ஆந் திகதி விபத்துக்குள்ளாகி இருந்ததுடன் அத்திகதியிலிருந்து வெளி இடமொன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்து 02 வருடம் 06 மாதம் 20 நாட்கள் (930 நாட்கள்) பிறகு வேறொரு வாகனத்தில் ஏற்றப்பட்டு நீதி அமைச்சுள்ள இடத்திற்கு 2019 செப்தெம்பர் 28 ஆந் திகதி கொண்டு வந்து இடப்பட்டிருந்தது. பதில் அமைச்சரின் பதவிக் காலம் 2018 ஒக்தோபர் 27 முடிவடைந்திருந்த போதிலும் அக்காலத்தில் வாகனத்தை முறையாக ஏற்றுக் கொள்வதற்கு இயலாது போய் இருந்தது. விபத்து தொடர்பாக 2017 யூன் 07 ஆந் திகதி நியமிக்கப்பட்ட பரீட்சிப்புக் குழுவின் அறிக்கை, பொலிசுக்கு பெற்றுக் | நி.பி 104 விசாரணைக் குழுவினை மீண்டும் நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் அக்குழுவினால் இடைக்கால அறிக்கையொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. அதன்படி இவ்வாகனத்தின் விபத்திற்கு பிறகு உயர்நீதிமன்ற தொகுதிக்கு கொண்டுவரப்பட்டு திகதி காலம் பற்றி அறிவிக்கும் படி உயர்நீதிமன்றத் தொகுதியின் பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் அறிவிக்கப்பட்டுள்ளது. விபத்து நடைபெற்ற சந்தர்ப்பத்தில் வாகனத்தை செலுத்தப்பட்ட மற்றும் வாகனத்தை அப்போதைக்கு முறையாக ஒப்படைக்கப்பட்ட நபர்களுக்கு வாய்மொழி வழங்கும் படி அறிவிக்கப்பட்டுள்ளது. | துரிதமாக பரீட்சிப்பினை முடிக்கப்பட்டு இழப்பினை அறவிடப்படல் வேண்டும். |

கொடுக்கப்பட்ட முறைப்பாட்டின் பிரதி, சாரதியின் வாய்மொழி ஆகியவை கோவையில் இருக்கவில்லை. மீண்டும் 2021 வருடம் நிதிப் பிரமாணம் 104 படி பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டு வந்த போதிலும் 2022 மே வரையிலும் விபத்திற்கு பொறுப்பான தரப்பினரை இனங்கண்டு அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பினை அறவிடப்படுவதற்கு அல்லது சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கு செயற்பட்டிருக்கவில்லை.

## 3.8 பொருளாதாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) அமைச்சுக்கான அலுவலகங்கள் நடாத்துவதற்காக 2021 சனவரி 20 ஆந் திகதி முதல் கொண்டு 03 வருட குறுகிய காலத்திற்கு வாடகை அடிப்படையின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த தரையில் சீமெந்து பூசப்படாத 02 கட்டிடங்களில் முதலாம் மற்றும் இரண்டாம் தளங்களில் சதுரஅடி 41,635 அளவினுள் நூல் கலந்த காபட் விரிப்பதற்காக ரூபா 6,567,713 வழங்கப்பட்டிருந்தது. அதன் போது உள்ளக அலுவலக ஸ்தலங்களுக்கு வெளியில் அமைந்துள்ள குறுகிய கால்நடைப் பாதைகள் நீர்ப் பாவனைக்கான இடங்கள், சுகாதாரம் பேணப்படும் இடங்கள் மற்றும் உணவு பெற்றுக் கொள்ளப்படும் இடங்களிலும் காபட் விதிக்கப்பட்டிருந்த மையினால் காபட் விரிக்கப்பட வேண்டிய அத்தியவசியமான இடங்கள் இனங்காணப்பட்டிருக்க வில்லை. | வாடகை அடிப்படையின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்ட களுதொட்டை கட்டிடத்தினுள் அமைச்சினை நடாத்துவதற்கான தேவைப்பாடுகளுக் கமைவாக தரையில் சீமெந்து பூசப்பட்டு ஒழுங்கினை மேற்கொள்வதற்கு போதுமான காலம் இல்லாதிருந்தமையால் காபட் விரிப்பதற்கு ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டது. | பயன்தரும் காரியங்களுக்காக பொருளாதார மேம்பாட்டினை மற்றும் சிக்கனத் தன்மை பற்றி உரிய கவனம் செலுத்தப்பட்டு செலவுகள் முகாமைத்துவப் படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டிருந்த சிறப்பு பிரிவின் அலுவலகத்தை | அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டிருந்த சிறப்பு பிரிவின் அலுவலகத்தை | தேவைப்பாட்டினை இனங்கண்டு கட்டிடங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | நடாத்துவதற்காக என அமைச்சரவை பத்திரத்தில் குறிப்பிட்டு அமைச்சரவையின் அனுமதியினை பெற்றுக் கொண்டு 2021 சனவரி 01 ஆந் திகதி வாடகைக்கு பெற்றுக் கொள்ளப்பட்ட ‘‘தவச’’ கட்டிடத்தில் 2021 மார்ச் மாதம் வரையில் அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப்பட்டிருந்தது. பின்னர் 2021 ஏப்ரல் முதல் 2021 திசெம்பர் 31 வரை 09 மாத காலம் கட்டிடத்தை வீணாக வைக்கப்பட்டு வாடகையாக ரூபா 2,385,000 செலுத்தப்பட்டிருந்தது. | நடாத்துவதற்காக அமைச்சரவையின் அனுமதியை பெற்றுக் கொண்டு நீதிமன்ற தானியங்கிபடுத்தும் திட்டத்திற்கான அலுவலகத்தை தாபிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. சந்தர்ப்பத்திற்கேற்ப பற்பல தேவைப்பாடுகளுக்கான அக்கட்டிடம் உபயோகப்படுத்தப்பட்டது. | வாடகைக்கு எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | உயர்நீதிமன்ற கட்டிடத் தொகுதியின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட இருப்பதாக குறிப்பிட்டு ஹல்ஸ்ட்டோப் வீதி, இலக்கம் 130 கட்டிடத்தை 2021 யூலை 12 முதல் 2021 திசெம்பர் 31 வரையிலான காலத்திற்கு ரூபா 900,000 மாதாந்த வாடகை செலுத்தப்படுவதற்கான அடிப்படையின் கீழ் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் வரையும் உயர்நீதிமன்ற தொகுதி திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்காமை யினால் செலுத்தப்பட்ட ரூபா 5,070,000 வாடகைப் பணம் பொருளாதார மற்ற செலவினமாக இருந்தது. மேலும் 2021 திசெம்பர் வரையும் அமைச்சின் சாரதிகள் உயர்நீதிமன்ற தொகுதிக் கட்டிடத்தில் வதிந்திருப்பதனால் உயர்நீதிமன்ற தொகுதி முகாமைத்துவ சபையின் பாதுகாப்பு மற்றும் பொறியியல் பிரிவுகளின் ஊழியர்களுக்கும் அதில் வதிவிட வசதிகள் பெற்றுக் கொடுக்கக்கூடிய இயலுமையினைத் தொடர்பாக கவனம் செலுத்தப்படாது இக்கட்டிடத்தை வாடகைக்கு எடுக்கப்பட்டிருந்தது. | வாடகைக்கு மேற்கொள்ளப்பட்ட கட்டிடத்தில் பாதுகாப்பு மற்றும் பொறியியல் பிரிவுகளின் ஊழியர்களுக்காக வதிவிடம் வழங்குதல், நூலகத்தினை தாபிக்கப்படுதல், நீதிமன்ற சார்பற்ற உத்தியோகத்தர் களைப் பயிற்றுவிக்கும் நிலையம் தாபிக்கப்பட்டது. அது போன்றே உயர்நீதிமன்ற தொகுதிக்குரிய பாதுகாப்புப் பிரிவின் மற்றும் பொறியியல் பிரிவின் ஊழியர்களுக்காகவும் வதிவிட வசதிகளினை பெற்றுக் கொடுக்கப்பட்டு கட்டிடத்தின் முழுமையான இடஅளவினை சம்பூரணமாக பாவனை மேற்கொள்ளப்பட்டிருப்ப துடன் அதற்காக செலுத்தப்பட்டுள்ள ரூபா 5,070,000 தொகையினை பொருளாதாரமற்ற செலவாக அவதானிக்க முடியாது. | தேவைப்பாட்டினை சரியாக இனங்காணப்பட்டு செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இலங்கை பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள மிகவும் நெருக்கடியான நிலைமையினுள் மீளாய்வாண்டு மற்றும் எதிர்வருடங்களில் அரச நிதிச் செயற்பாடுகளை முறையாக முன்னெடுத்துச் செல்வதற்கான தேவைப்பாட்டினை மும்முரமாக உணரப்பட்டுள்ள இச்சந்தர்ப்ப'தில் அரச செலவினங்கள் மிகவும் சிக்கனமாக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த கொண்டாட்ட நிகழ்ச்சிகள், சில்லறைக் காசேட்டிலிருந்து உணவு பொருட்கள் மற்றும் பாமசி மருந்து வகை கொள்வனவு மேற்கொள்ளல், நீதிமன்றத் தொகுதியினை திறப்பதற்கான விளம்பரங்கள் வெளியிடுதல் மற்றும் அதற்காக உணவுப் பொருட்கள் கொள்வனவு செய்தல் மற்றும் கைத்தொலைபேசியினை கொள்வனவு செய்தல் அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு செல்லும் பாதையை காப்பட் விரிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தல் மற்றும் பூங்கா அலங்கரிப்பு, நாயக்க தேரர்களை காணச் செல்லும் போது அட்டபிரிகர மற்றும் பலவகைகள் கொள்வனவு மேற்கொள்ளல், புதுவருட வாழ்த்துக் காட்கள் அச்சிடுதல் ஆகிய செலவினங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த தொகையினை மொத்தம் ரூபா 7,847,207 பொருளாதாரமற்ற கொடுக்கல் வாங்கலாக அவதானிக்கப்பட்டன. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இக்கட்டான நிதி நெருக்கடியின் முன்பாக திறனாராய்வுடன் செயற்பட வேண்டும். |

## 3.9 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) (i) நீதி அமைச்சினை புது இடமொன்றில் தாபிப்பதற்காக வாடகை அடிப்படையில் வெளித்தரப்பினர் ஒருவரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட இரு கட்டிடங்கள், சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் நிர்மாணப் பணிகளை இடைநடுவே கைவிடப்பட்டு பாவனை மேற்கொள்ளப்படாதிருந்த 11 மாடிகளைக் கொண்ட கட்டிடத்தினைக்கு வதிவுக்கு உகந்தவாறு நிர்மாணிப்பினை மேற்கொள்ளப்பட்டிருக்காமையினால் அரசின் மதிப்பீட்டினை பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆயினும், கட்டிடத்தின் ஒரு சதுர அடிக்கு முதல் வருடம் ரூபா 130 மற்றும் அதன் பின்னர் ஒவ்வொரு வருடமும் நூற்றுக்கு 05 அதிகரிப்புடன் செலுத்துவதற்கு உடன்பட்டு 2021 திசெம்பர் 31 ஆந் திகதி 3 மாதத்திற்கான வாடகை முற்பணம், பாதுகாப்பு வைப்பு மற்றும் மாதாந்த வாடகையாக மொத்தத் தொகை ரூபா 77,801,100 செலுத்தப்பட்டிருந்தது. அத்தோடு இக்கட்டிடங்களுக்கான அங்கீகரிக்கப்பட்ட கட்டிட திட்டப் படங்கள், கொழும்பு நகர சபையினால் வெளியிடப்படும் வதிவதற்கும் பாவனைக்கு உகந்ததென ஊர்ஜீதப்படுத்தப்படும் சான்றிதழ் (COC சான்றிதழ்) மற்றும் அலுவலகத்தினை | கட்டிட சொந்தக்காரரினால் சார்பு சான்றிதலை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அறியத் தரப்பட்டுள்ளது. அதன் பின்னர் மதிப்பீட்டு அறிக்கையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கட்டிடத்தின் உறுதிப்பாட்டினைக்கான சான்றிதழ் (Stability Report) பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | கட்டிடங்களை வாடகைக்கு எடுக்கும் போது சகல விதத்திலும் வதிவுக்கு தகுந்ததாக சட்டபூர்வமாக அத்தாட்சி மேற்கொள்ளப்பட்ட கட்டிடங்கள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டியதுடன் பணம் செலுத்தும் போது அரச மதிப்பீட்டின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடாத்திச் செல்வதற்காக கட்டிடத்தின் நிலைமை மற்றும் யோக்கியாம் சத்திற்கான தேசிய கட்டிட ஆராய்ச்சி இயக்கத்தின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | அதேபோன்று 2021 திசெம்பர் 08 கணக்காய்வு திகதி இரண்டாவது கட்டிடத்தின் தரைத் தளத்தில் 4158 சதுர அடிகளும், முதலாம் தளத்தில் 8477 சதுரஅடி அளவும் எதுவித உபயோகமும் மேற்கொள்ளப்படாதிருந்தும் 2021 வருடத்திற்காக ரூபா 21,816,210 வாடகை செலுத்தப்பட்டிருந்ததுடன், தரைத் தளத்தில் 4158 சதுரஅடிகள் மற்றும் முதலாம் தளத்தில் 12530 சதுரஅடிகள் ஆகியவற்றின் ஊடாக திருத்த வேலைகளுக்காக ரூபா 11,067,732 செலவிடப்பட்டிருந்தது. | கட்டிடத்தினுள் மின்சாரம், நீர், உள்வெளி தொலைபேசி வலையமைப்பு, இணைய வசதிகள், ஏர்கொண்டிசன் வசதிகள் ஆகியவற்றை வழங்கும் தாமதத்தினால் உள்ளக கணக்காய்வு பிரிவு, பதிவகம், களஞ்சியசாலை, சாரதி ஆய்வு கூடம், அமைச்சர் மற்றும் செயலாளர் அலுவலகம் மற்றும் சட்டப்பிரிவு ஆகியவை தாபிப்பற்கு தாமதப்பட்டன. கணக்காய்வுப் பிரிவு, பதிவகம், களஞ்சியசாலை, சாரதி ஓய்வுகூடம், அமைச்சர் மற்றும் செயலாளர் அலுவலகம் மற்றும் சட்டப் பிரிவு ஆகியவை தாபிப்பதற்கு தாமதப்பட்டன. | தேவைப்பாட்டினை சரியான இனங்கண்டு கட்டிடங்கள் வாடகைக்கு பெறப்படல் வேண்டும். |
| (ஆ) | அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களங்கள் / நிறுவனங்களின் பணிக்குழுாம்களின் ஒழுக்காற்று பரீட்சிப்பு நடவடிக்கை தொடர்பாக 2017 முதல் 2021 வரையிலான காலத்தினுள் கோவையிடப்பட்டிருந்த ஒழுக்காற்று பரீட்சிப்பு எண்ணிக்கை 107 ஆக இருந்ததுடன் 2022 மே வரை ஒழுக்காற்று பரீட்சிப்பு கோவை 46 முடிக்கப்படாதிருந்தது. மேலும் 2017 முன்னர் கோவையிடப்பட்டிருந்த 17 ஒழுக்க கோவைகள் இருந்தன. | 2017 முதல் 2021 வரை கோவையிடப்பட்டிருந்த ஒழுக்காற்று பரீட்சிப்பு 107 இல் 2022 வருடம் மே மாதம் வரை 61 முடிக்கப்பட்டுள்ளதுடன் மீதி 46 ஒழுக்காற்று கோவைகளின் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2017 இற்கு முன்னர் கோவையிடப்பட்டிருந்த 21 ஒழுக்காற்று கோவைகளில் 17 தற்போது மீதியாகி உள்ளது. | ஒழுக்காற்று பரீட்சிப்பு நடவடிக்கைகள் துரிதமாக முடிக்கப்பட்டு ஒழுக்காற்று தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | யாழ்ப்பாண மாவட்டத்தில் செயற்படும் 2889 மழை நீர் டாங்கிகள் நிர்மாணிப்புத் திட்டத்தின் பௌதீக முன்னேற்றத்தினை உறுதி செய்து கொள்ள முடியாதிருந்தது. | 2020 வருடம் நல்லிணக்கத்தினை அடிப்படையாகக் கொண்டு பொருளாதார வலுவூட்டலில் சமூக கட்டமைப்பினை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமுல்நடாத்தப்பட்ட திட்டங்களின் முன்னேற்ற அறிக்கைகள் தற்போது அமைச்சிடம் வரவழைத்துக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | செயற்படுத்தப்படும் திட்டங்களின் பௌதீக முன்னேற்றத்தினை காலரீதியாக பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | சர்வதேச வாணிப உடன்படிக்கைகள் மற்றும் ஏனைய சர்வதேச உறவுகள் மூலமாக ஏற்படும் பிணக்குகளினை தீர்ப்பதற்காக வலய மத்திய நிலையமாக 2013 வருடம் சர்வதேச இணக்க மத்திய நிலையம் ஒன்றினை ஏற்படுத்தப்பட்டு அதனை நிலையான இடத்தில் தாபிக்கப்படும் வரையில் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட இடத்தில் நடாத்தப்பட்டு வந்ததுடன் 2013 யூலை முதல் 2021 திசெம்பர் 31 வரை வாடகை மற்றும் நிர்வாகச் செலவினமாக மொத்தம் ரூபா 231,288,405 செலுத்தப்பட்டிருந்தது.<br>பின்னர் இந்த மையத்தினை 2016 திசெம்பர் மாதம் பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனியாக தாபிக்கப்பட்டதுடன் கம்பனிக்குத் தேவையான மூலதனத்தினை வழங்குதல் தொடர்பாக தீர்மானம் மேற்கொள்ளப்படாமை மற்றும் பணிப்பாளர் சபையை நியமிக்கப்படாமை ஆகிய காரணங்களினால் அக்கம்பனி செயலற்று போயுள்ளதாக ஆவணங்களின் மூலம் அவதானிக்க கூடியதாக இருந்தது. இதன் படி | இணக்க மையத்தினை மேற்கொண்டும் பயனுள்ளதாகவும் மற்றும் சர்வதேச தரங்களுக்கு அமைவாகவும் நடாத்திச் செல்வதற்கு புதுக்கொடுப்பு துறைமுகம் மற்றும் பரஸ்பர தொடர்புகளினை பேணிச் செல்வதற்கு துறைமுக நகர பொருளாதார அதிகார சபையுடனான இணக்கப்பாட்டினை ஏற்படுத்திக் கொள்வது பொருத்தம் என முன்மொழியப்பட்டது. அதற்கான 2021.10.12 மற்றும் அமப/16/21/1768/390/039-1 மூலமாக அனுமதியினை பெறப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் 2021.12.27 திகதி கைச்சாத்திடப்பட்டது. | இந்நிர்வாகப் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணப்பட்டு தாபிக்கப்பட்ட நோக்கத்தினையும் நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மையத்தினை தாபிக்கப்பட்டு 8 ½ வருடங்கள் கழிந்து விட்ட போதிலும் இம்மையத்தினை நிலையான இடத்தில் தாபிப்பதற்கு நீதி அமைச்சினைக்கு இயலாது போயிருந்ததுடன் மையத்தினை தாபிக்கப்பட்டதன் நோக்கத்தினையும் நிறைவேற்றிக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | பணி இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர் / ஊழியர் 03 பேரின் கடன் நிலுவை மொத்தம் ரூபா 323,197 ஆனது 09 வருடம் முதற்கொண்டு 14 வருட வரையிலான வீச்சில் அறவிடப்படாது இருந்தது. | ஒரு கடன்படுநரின் தகவலினை கண்டுபிடிக்க முடியாது உள்ளதுடன் ஏனைய 02 கடன் நிலுவையினை அறவிடப்படுவது தொடர்பாக சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | கடன் நிலுவைகள் அறவிடப்பட வேண்டியுள்ளன. |
| (ஊ) | பணியினை விட்டுச் சென்ற ஒரு உத்தியோகத்தர்களின் மொத்தம் ரூபா 238,395 ஆன கடன் நிலுவை 06 வருடம் முதல் 07 வருடம் வரையிலான வீச்சில் அறவிடப்படாதிருந்தது. | சட்டபூர்வ நடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக சம்பந்தப்பட்ட தகவல்கள் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | கடன் நிலுவைகள் துரிதமாக அறவிடப்பட வேண்டும். |
| (எ) | அரச உத்தியோகத்தர்களின் முற்பண "பீ" கணக்கின் வருடாந்த இணக்கக் கூற்றில் மீளாய்வாண்டு இறுதியில் திறைசேரி அச்சுப் பத்திரங்களின் படி உண்மையான மீதி மற்றும் திணைக்கள புத்தகங்களின் படி உண்மையான மீதிகளுக்கிடையில் ரூபா 27,380 வேறுபாடும், திணைக்கள புத்தகங்கள் மற்றும் தனிநபர் கடன் மீதிகளின் மொத்தம் இடையே ரூபா 8415 வேறுபாடும் காணப்பட்டது. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்குக் கூற்றுக்களில் சரியாக பெறுமதிகள் காட்டப்பட வேண்டியதுடன் நிலுவைகள் இணக்கம் காணப்பட்டு வேறுபாடுகள் சரி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | ஓய்வுபெற்றுச் சென்ற நான்கு உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 711,685 மற்றும் சேவையில் ஈடுபட்டிருக்கும் உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 7,600 ஆன விசேட முற்பண நிலுவையினை கடன் நிலுவை மொத்ததினைக்கு சேர்க்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. | சரியான பெறுமதியினை காட்டப்பட வேண்டும். |
| (ஐ) | நிதிக்கூற்றுக்களில் உட்பட்டுள்ள 2021 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் படி செலவின பொழிப்பின் (ACA-2) நிதிப் பிரமாணம் 66/69 மாற்றப்பட்டமை ரூபா 21,624,344 வரை இருக்காமையினால் அப்பெறுமானத்தின் மொத்த தேறிய மீண்டெழும் ஒதுக்கீடு கூடுதலாகவும் மூலதன ஒதுக்கீடு குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | தவறுதலாக நி.பி 66 கீழ் மாற்றல் நிகழ்ச்சித் திட்டத்தின் படி செலவின பொழிப்பில் காட்டுவதற்கு முடியாது போய் உள்ளது. | சரியாக நிதிக் கூற்றுக்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

**4. மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் பணிக்குழாமில் சிரேஷ்ட மட்ட உத்தியோகத்தர் 15 பேர்களினதும், மூன்றாம் மட்ட உத்தியோகத்தர் 05 பேர்களினதும் ஆரம்ப மட்ட ஊழியர் 13 பேர்களினதும் வெற்றிடங்கள் நிலவின. | வெற்றிடங்கள் நிரப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | அத்தியாவசிய பதவிகளின் வெற்றிடங்கள் நிரப்பிக் கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | சமாதான நிர்ணய ஆணைக்குழுவில் நிர்வாக அதிகாரி பதவிக்காக ஒரு வருட காலத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளப்பட்டு 2022 யூன் வரையிலும் | அரச சேவை ஆணைக்குழு செயலாளரின் இலக்கம் PSC/APP/HB/01/2022 மற்றும் 2022.05.25 திகதிய சுற்றறிக்கையின் படி முன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வெற்றிடங்கள் நிலையான அடிப்படையின் கீழ் நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். | | |
| (இ) | 02 அசையா படப்படிப்பாளர் பதவிகளுக்காக 2007 திசெம்பர் 03 ஆந் திகதி வரை மற்றும் 2014 ஒக்தோபர் 24 ஆந் திகதி வரையும் இரு ஊழியர்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 பெப்ரவரி வரையும் இவ் இரண்டு பதவிகளுக்குமாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அசையா படப்பிடிப்பாளர் பதவிகள் இரண்டுக்குமாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | சம்பந்தப்பட்ட பதவிகளுக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | அமைச்சரவை பத்திர இலக்கம் 12/1783/518/021 இல் சட்ட ஆலோசகர் பதவிக்கு 2013 சனவரி 01 ஆந் திகதி முதல் அமுலாகும் படி ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்காக ஒரு பெண் உத்தியோகத்தரை நியமனம் செய்வதற்கும் அச்சேவைக் காலம் முடிவடைந்ததன் பின்னர் பொருத்தமான உத்தியோகத்தரை இனங்கண்டு அமைச்சரவை அலுவலகத்தில் இணைத்துக் கொள்ளவும் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் அமைச்சு இவ்வாறு செயல்படாது ஒப்பந்த காலத்தினை வருடத்திற்கு வருடம் நீடிக்கப்பட்டு 2022 ஒக்தோபர் 20 வரையும் மேற்கொண்டும் நீடித்துக் கொள்ளப்பட்டிருந்தது. | அமைச்சுக்கு முன்வைக்கப்படும் சட்டப் பிரச்சினைகள் மற்றும் ஏனைய சட்டத் தேவைப்பாடுகளுக்காக சட்டத் துறையில் அனுபவம்மிக்க அது போன்று உத்தியோகத்தரின் சேவை அவசியமாக இருந்தமையால் வருடாவருடம் நீடிக்கப்பட்டு சேவையினை பெற்றுக் கொள்ளப்பட்டது. | அமைச்சரவையின் தீர்மானப் படி செயற்பட வேண்டும். |
| (உ) | ஓய்வுபெற்ற அதிகாரிகளை ஒப்பந்த அடிப்படையின் கீழ் மீண்டும் சேவையில் ஈடுபடுத்துவதற்கு பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த அங்கீகாரத்தின் படி சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த மேலதிக செயலாளர் (சட்டம்) பதவியின் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தக் | 2021.10.18 திகதி முதல் 2022.04.30 வரையிலும் மேலதிக செயலாளர் (சட்டம்) பதவியில் உண்மையாகவோ கடமையை மேற்கொள்ளப் பட்டமையினால் அக்கால எல்லையினைக்கான ஒப்பந்த காலத்தினை நீடித்துக் கொள்வதற்காக மேல்முறையீட்டினை அரச | அரச சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் மாத்திரம் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் கள் ஒப்பந்த அடிப்படையில் மீண்டும் பதவியில் சேர்த்துக் கொள்ளப்பட |

| | | |
|---|---|---|
| காலம் முடிவடைந்த பின்னரும் அங்கீகாரம் இல்லாது 2021 ஒக்தோபர் 18 ஆந் திகதி முதல் 2022 ஏப்ரல் 30 வரையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு ரூபா 1,166,797 கொடுப்பனவாக வழங்கப்பட்டிருந்தது. | சேவைகள் ஆணைக்குழுவிற்கு செய்துள்ளார். | வேண்டும். |